சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
Department of Education Sabaragamuwa
வலயக் கல்விக் காரியாலயம் - தெஹியோவிற்ற

# வரலாறு
# தரம் 10

ஆக்கம் - சி. கவிதா (Dip.in.tea. Bed® ) கே/தெஹி/ ஸ்ரீ கணேசா த.ம.வி புளத்கொகுபிட்டிய

# 6. வரலாற்று அறிவும் அதன் நடைமுறைப்பிரதியீடும்

# இலங்கை வரலாற்றில் பண்பாட்டுக்கு உரித்தான ஆறு எண்ணக்கருக்கள்

- வரலாற்றுக்கால சமுதாய அமைப்பு
- சட்டமும் பாரம்பரியங்களும்
- பணமும் செலாவணியும்
- பெண்களின் பங்களிப்பு
- சுதேச உணவு
- சூழல் பாதுகாப்பு

# வரலாற்றுக்கால சமுதாய அமைப்பு

ஒருசமுதாயம் நிலையானதாக செயற்படுவதற்கு அந்த சமுதாயத்தில் வாழும் நபர்களுக்கும், குழுக்களுக்கும் இடையில் நிலவும் தொடர்பின் தன்மை சிறப்பாக காணப்படவேண்டும்.

புராதன சமூக அமைப்பு

புராதன சமூக அமைப்பு இரண்டு கட்டமைப்புக்களை கொண்டதாகும்

1. நிலைக்குத்து கட்டமைப்பு
2. கிடையான கட்டமைப்பு

# நிலைக்குத்து கட்டமைப்பு

மேலிருந்து கீழ்வரை அதிகாரமும் பொறுப்புக்களும் படிப்படியாக பகிரப்படுவதே நிலைக்குத்துகட்டமைப்பு எனப்படும்

| | |
|---|---|
| முதல் படிவரிசை | அரசன் |
| இரண்டாம் படிவரிசை | அரசஅதிகாரிகள், உயர்குடியினர், பிக்குகள் |
| மூன்றாம் படிவரிசை | விவசாயிகள், சாதாரணமக்கள் |
| நான்காம் படிவரிசை | அடிமைகள் |













- அரசன் அரச மரபை சேர்ந்தவனாக இருக்கவேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது
- அரசன் மக்களுக்கு தெய்வமாக விளங்க வேண்டியவன் என குட்டகண்ண அபயனின் தம்புள்ள விகாரைக்கல்வெட்டு கூறுகின்றது
- அரச அதிகாரிகளை ரத்கொல் சம்தரு என கல்வெட்டுக்கள் கூறுகின்றது
- மூன்றாவது படிவரிசையில் உள்ள விவசாயிகள், இடையர்கள், கலைஞர்களே சமூகத்தில் அதிக தொகையில் காணப்பட்டனர்
- நான்காவது படிவரிசையில் உள்ள அடிமைகள் பரம்பரைஅடிமைகள், கூலிக்குபெறக்கூடிய அடிமைகள் என இரு வகையினர் காணப்பட்டனர்

# கிடையான கட்டமைப்பு

கிடையான கட்டமைப்பு என்பது ஒரேபடிவரிசையில் உள்ள சமாந்திர வகையினரிடையே உள்ள இடைத்தொடர்பு ஆகும் ஒரு சிறந்த சமூக இயக்கத்திற்கு நிலைக்குத்து கட்டமைப்பின் இடைத்தொடர்பு போல கிடையான கட்டமைப்பின் இடைத்தொடர்பும் சிறப்பாக இருக்கவேண்டும்

# கிடையான கட்டமைப்பு






உதாரணமாக மந்திரிகள், சேனாதிபதி, திறைசேரிப்பொருப்பாளர், பிக்குகள் போன்ற ஒரே வரிசையில் உள்ளோரின் இடைத்தொடர்பு சிறப்பாக இருக்கவேண்டும்.

## புராதன சமூகஅமைப்பின் சிறப்பியல்புகள்


- அரசனே நாட்டின் தலைவனாக விளங்கினான், அரசன் மக்களின் நலனுக்காக சேவையாற்றினான்

- அரசனின் சட்டங்கள் அனைவருக்கும் சமனாக காணப்பட்டது
- சமயஒழுக்கத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது

- புராதன குளங்களும், விகாரைகளும் கிடையானகட்டமைப்பில் உள்ளவர்களினதும், நிலைக்குத்துகட்டமைப்பில் உள்ளவர்களினதும் சிறப்பான புரிந்துணர்வை எடுத்துக்காட்டுகின்றது

- அக்கால சமூகம் சிறப்புற்றிருந்தமைக்கு மன்னர்களினதும், மக்களினதும் சிந்தனைகள் உயர்வாக இருந்தமையை எடுத்துக்காட்டுகின்றது
- ஒவ்வொரு மட்டத்திலிருந்தவர்களும் தமது பணிகள் தொடர்பாக அதற்கு மேலிருந்தவர்களிடம் பொறுப்புக்கூறவேண்டியிருந்தது

- சமய ஒழுக்கத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது
- அதிகாரிகளுக்கும், தொழிலாளர்களுக்குமிடையே சிறந்த உறவு காணப்பட்டது.
- மன்னன் சிறந்த நிர்வாகியாகக் காணப்பட்டான்.
- அரசன் தமது ஆட்சி நடவடிக்கைகளில் அமைச்சர்களினதும், பிக்குகளினதும் ஆலொசனையைப் பெற்றான்



# 6.2 வரலாற்றுக்கால சட்டமும் பாரம்பரியமும்

சட்டம் இயற்றும் உயர்சபையாக அரசசபை காணப்பட்டது (மானவர்மனின் கல்வெட்டுக்களில் வதால, சபாவ ஆகிய சொற்கள் சட்டம் தொடர்பான நிறுவனங்களைக் குறிக்கும்)

மக்களிடையே சட்டம் செயற்படுத்தப்படுவது பாதுகாப்பு அதிகாரிகளினாலேயே ஆகும்
அவ்வதிகாரிகளை குறிப்பதற்கு தண்டநாயக்க என்ற சொல் பயன்படுத்தப்பட்டது

(முதலாம் விஜயபாகுவிற்கு பகைவர்களால் துன்பம் ஏற்படும்போது சித்தாரும்பி புத்தநாயக்க என்ற தண்டநாயக்க உதவியதாக பனாக்கடுவ செப்புசாசனம் கூறுகின்றது

## வரிச்சட்டத்தின் மூலம் அறவிடப்பட்ட முக்கிய வரிகள்

**தக்கபதி** – குளங்களிலிருந்து நீரைப்பெற்றோரிடம் அறவிடப்பட்ட வரி

**போஜக்கபதி** – அரசனுக்கு சொந்தமான நிலங்களில் பயிர்செய்வதற்காக அறவிடப்பட்ட வரி

**மதரமஞ்சக்க** - வாய்க்கால்களில் மீன்பிடித்ததற்காக அறவிடப்பட்ட வரி

**மாத்ரிக மத்சய பாகய** சிறு வாய்க்கால்களில் மீன் பிடித்தோரிடம் அறவிடப்பட்ட வரி

- சில சந்தர்ப்பங்களில் பொருளாகவும் வரி பெறப்பட்டது
- வெளிநாடுகளிலிருந்து பொருளை இறக்குமதி செய்யும்போது துறைமுகங்களில் சுங்கவரி அறவிடப்பட்டது
- கொடவாய விகாரைக்கல்வெட்டொன்றில் துறைமுகத்தினால் அறவிடப்பட்ட வரி அவ்விகாரைக்கு வழங்கப்பட்டதாக கூறப்படுகின்றது
- சட்டங்களை மீறுவோறுக்கு எதிராக தண்டனை வழங்கும் நீதிமன்றங்கள் தொடர்பாக முதலாம் கஜபாகுமன்னனின் சித்துல்பவ்வ கல்வெட்டு கூறுகின்றது

## நான்காம் உதயனால் விதிக்கப்பட்ட ஹோப்பிட்டிகம சந்தை நிர்வாகம் தொடர்பான சட்டங்கள்
## ( பதுளைத் தூண் கல்வெட்டு /சொரபொரவாவி தூண் கல்வெட்டு )

- வர்த்தக நிலையத்தைக் கடந்து செல்வோரிடமிருந்து வரி அறவிடக்கூடாது.
- அதிகாரிகளிடம் காண்பிக்காது வர்த்தக நிலையங்களில் பொருள்கள் விற்போரிடமிருந்து இரு மடங்கு வரி அறவிட வேண்டும்.
- அரச அதிகாரிகளால் அளவு குறிக்கப்படாத தராசுகள் கொண்டு வியாபாரம் செய்தலாகாது.
- வெற்றிலை, பாக்கு என்பன அதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் மாத்திரம் வியாபாரம் செய்தல் வேண்டும்.
- போயா தினங்களில் வியாபாரம் செய்வோரிடமிருந்து தண்டப் பணமாக எண்ணெய் வரி அறவிட வேண்டும்.

| | | |
|---|---|---|
| நான்காம் மகிந்தன் | அநுராதபுரக் கல்வெட்டு | உயர் நிலங்களில்உள்ள மரங்களை வெட்டக் கூடாது |
| மூன்றாம் உதயன் | புத்தன்னெஹெலக் கல்வெட்டு | காட்டு மரங்களை வெட்ட வேண்டாம் |
| ஐந்தாம் காசியப்பன் | கொண்டவட்டவான் தூண் கல்வெட்டு | மரஞ்செடிகளின் முகாமைத்துவம் தொடர்பான சட்டம் |
| ஆமண்டகாமினி அபய மன்னன் | - | மிருகங்களை எவரும் கொல்லக் கூடாது (படுகொலைச் சட்டம்) |
| நான்காம் மகிந்தன் | மிகிந்தலைக் கல்வெட்டு | எருமை, பசு, ஆடு என்பவற்றைக் கொல்வோருக்கு மரணதண்டனை விதிக்கும் சட்டம் |
| நான்காம் மகிந்தன் | வேவல்கட்டிய | கொலைக்குறிய தண்டனை மரணதண்டனை மாடுகளை திருடுபவர்களுக்கு மாடுகளில் உள்ள அடையாளங்கள் அவர்களின் நெற்றியில் இடவேண்டும் |
| நிசங்கமல்லன் | - | நீர் நிலைகளில் வாழும் உயிரினங்களைக் கொலை செய்யக் கூடாது |
| ஐந்தாம் காசியப்பன் | கொண்டவட்டவான் தூண் கல்வெட்டு | உரிய காலத்தில்அறுவடை செய்யத் தவறும் நபர்கள் ஐந்து கலங் அபராதம் செலுத்த வேண்டும் |
| நான்காம் மகிந்தன் | வெஸ்ஸகிரி கல்வெட்டு | குளங்களிலிருந்து நீர் பெறப்படும் வயல்களில் நெல் தவிர, பாசிப்பயறு விதைத்தலாகாது |

# குற்றச் செயல்கள் தொடர்பான சட்டங்கள்

## நான்காம் மகிந்தன் -வேவல்கெட்டிய கல்வெட்டு

- களவு எடுத்தல், கொலை செய்தல் தொடர்பாக விதிக்கப்பட வேண்டிய தண்டனை
- கொலைக் குற்றத்திற்கு வழங்கப்பட்ட தண்டனை –தூக்கிலிடுதல்
- பிறருக்குச் சொந்தமான மாடுகளைக் களவு செய்து பிடிபட்டால் அந்த மிருகங்களைத் தேடி உரியவர்களிடம் ஒப்படைத்து, மாடுகளின் உடலில் இடப்பட்ட அடையாளத்தை திருடியவர்களின் நெற்றியில் சூடாக்கி இடவேண்டும்


- தலைமறைவாகி இருக்கும் குற்றவாளிகளைப் பிடிக்கும் பொறுப்பு அக் கிராமத்து மக்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

- குற்றவாளியைப் பிடிக்கும் வரை குற்றவாளி வாழ்ந்த கிராம மக்கள் செலுத்த வேண்டிய வரி உள்ளூர் தண்டப்பணம்எனப்பட்டது.

# 6.3 பணமும் செலாவணியும்

- செலாவணி என்பது பொருளாதார நோக்கத்துடன் செயற்படும் நாணயமாற்று முறையாகும்
- களிமண்ணாலான வட்டவடிவம் கொண்ட கலம் என்ற பொருளும் பொருளாதார நடவடிக்ககளுக்காக பயன்னடுத்தப்பட்டிருக்கலாம் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்
- இந்நாட்டில் கி.மு 250 ஆண்டளவில் பணப்புழக்கம் ஆரம்பமாகியது







- வடஇந்திய வர்த்தகர்களால் ஹஸ்ளபு என்ற வெள்ளி நாணயம் இங்கு கொண்டுவரப்பட்டது சதுரம் வட்டவடிவமுடைய இந்நாணயத்தில் பல இலச்சினைகள் பொறிக்கப்பட்டிருந்தது

- கல்வெட்டுக்களில் கஹபன என்றும், இலக்கியங்களில் கஹவனு என்றும் அறிமுகமாவது இந்த ஹஸ்ளபு நாணயமாகும்

- புராதன காலத்தில் யானை உருவம் பதிக்கப்பட்ட நாணயமும், சுவஸ்திகா உருவம் பதிக்கப்பட்ட நாணயமும் பயன்படுத்தப்பட்டன





- நாணயவெளியீட்டு அதிகாரிகள் ரூப்பதக்க என அழைக்கப்பட்டனர் முற்காலத்தில் பெறுமதிவாய்ந்த உலோகத்துண்டுகள் வர்த்தக செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்டன
- அபயகிரி விகாரை அகழ்வுகளில் தங்கஉலோத்துண்டொண்டு கண்டுபிடிக்கப்பட்டது அதில் ரன்தெவிசிகலந்த என எழுதப்பட்டுள்ளது கலந்த என்பது நிறை அலகாகும்
- உரோம நாணயங்கள் இலங்கையில் பலபாகங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளது அவை செப்பு நாணயங்களாக காணப்பட்டது.
- முற்காலத்தில் இலங்கையின் துறைமுகங்களில் சுங்கவரி அறவிடப்பட்டது வெளிநாட்டவர் தமது நாட்டின் பணத்திலேயே வரி கட்டினர்
- உரோம நாணயங்கள் தவிர்த்து சீன, அரேபிய, பிரித்தானிய, நாணயங்களும் இந்நட்டில் இருந்துள்ளன

# 6.4 பெண்களின் பிரதிநிதித்துவம்

- லீலாவதி அரசிஇந் நாட்டை மூன்று தடவைகள் ஆட்சி புரிந்தமை.
- சீவலி, அனுலா, கல்யாணி, லீலாவதி போன்ற ஆட்சியாளர்கள் இருந்தனர்
- தூர நாடொன்றுக்கு வர்த்தகத்தின் பொருட்டு சென்ற கணவன் மூன்று வருடங்களின் பின் திரும்பி வரும் வரை தனியாக வாழ்ந்த பெண் பற்றி ரசவாஹினிஎன்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- பெண்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் ஆட்சியாளர்கள் ஆர்வம் காட்டினர்
- பெண் ஒரு தாய் என்ற வகையில் அக்காலசமூகம் பெண்ணுக்கு உயர்ந்த அந்தஸ்த்தை வழங்கியது





- சாலியவின் மனைவி அசோகமாலா துட்டகைமுனு அரசனின் மாளிகையில் சுவையான உணவு தயாரித்து வழங்கியதாக சத்தர்மலங்கார என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- கல்வியறிவில் சிறந்து விளங்கிய பெண்கள் பதுபாச்சிகாஎன்ற பெயரில் அழைக்கப்பட்டதாக தம்பியா அட்டுவா கெற்றபத என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- பிரதேச ஆட்சியில் பங்குபற்றிய பெண்கள் பருமகலு எனக் குறிப்பிடப்பட்டனர்.
- விகாரமகாதேவியிடம் பிக்குமார் அவளின் செல்வாக்குப் பற்றி வினவிய போது பிள்ளைகள் இல்லாத வாழ்வில் உள்ள சுகம் என்ன சுகம் எனப் பதிலளித்ததாக ரசவாஹினியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- தலதாலக்சுமி பௌத்த விகாரைக்கு நிலபுலன்களைத் தானமாக வழங்கியமை

- விகாரமகாதேவியிடம் பிக்குமார் அவளின் செல்வாக்குப் பற்றி வினவிய போது பிள்ளைகள் இல்லாத வாழ்வில் உள்ள சுகம் என்ன சுகம் எனப் பதிலளித்ததாக ரசவாஹினியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- தல்தாலக்சுமி பௌத்த விகாரைக்கு நிலபுலன்களைத் தானமாக வழங்கியமை

- பெற்றோரினால் பெண்பிள்ளைகள் சிறப்பாக வளர்க்கப்பட்டனர் திருமணம்வரை அவர்களுக்கு பாதுகாப்பும், கல்வியும் வழங்கவேண்டும் என சகஸ்ஸவத்துப்பரண நூல் கூறுகின்றது

- முற்காலப்பெண்கள் தம்மை அழகுப்படுத்திக்கொண்டனர்

- கண்ணுக்கு மையிடும் குச்சி (உடரஞ்சாமடம)
- பெண்கள் தோலைநிறமூட்ட பயன்படும் சிவப்பு, மஞ்சள்,நிறங்கள்
- களிமண்மணிகள்
- இப்பன்கட்டுவவையில் கண்டெடுக்கப்பட்ட கழுத்துச்சங்கிலி (அதில் சில மணிகள் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டது

# 6.5 சுதேச உணவு

- வரலாற்றுக் காலத்தில் பெருமளவில் நெல், உழுந்து,எள்ளு, குரக்கன் போன்ற தானியங்களை உணவாக உட்கொண்டனர். ( தோணிகல கல்வெட்டு )
- கறிகளைச் சுவையூட்டுவதற்கு உப்பு, சீரகம், மிளகாய், கொத்தமல்லி, கடுகு, வெந்தயம் போன்ற வாசனைப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டது.
- உணவைச் சுவையூட்டுவதற்கு புளிப்பு வகைகளும் பயன்படுத்தப்பட்டன. ( எலுமிச்சை, கொரக்காப் புளி )

- உணவு சமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட எண்ணையில் நெய் முக்கிய இடத்தைப் பெற்றதுடன், தேங்காய் எண்ணெய் பாவனை குறைவாகவே காணப்பட்டது.
- உணவை நறுமணமாக்க கறிவேப்பில்லை பயன்படுத்தப்பட்டது. இது களுபொஓய என இலக்கிய மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டடுள்ளது.
- முற்கால மக்களிடையே கஞ்சி ஒரு பிரபல உணவாககாணப்பட்டது கஞ்சியை பழையநூல்கள் அபுஹம்புகாடி என குறிப்பிடுகின்றது

- கஞ்சியை அதிகளவில் உணவாகக் கொண்டனர். ஒரு பங்கு அரிசியுடன் ஆறு பங்கு நீர் சேர்த்து தயாரிக்கப்பட்ட கஞ்சி யவாகு எனப்பட்டது.
- மருத்துவக் குணமுடைய இலைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கஞ்சி எம்புல்ஹும்பு எனப்பட்டது.
- இயற்கையில் காணப்பட்ட உணவை அதன் போசனைச் சத்துக் குறையாமல் தயாரித்து உண்டனர்.

- பால் ( கிரிகெரி ), தயிர் ( தீகிரி ) என்பவற்றின் பாவனை சாதாரண மக்களிடையேயும் காணப்பட்டது.
- மாமிச உணவை உட்கொண்டனர்.
- தித்தயா என்ற மீன் அதிகமாக உண்ணப்பட்டது
- தானியங்கள் வறுத்து அதன்மூலம் பெறப்பட்ட உணவு அத்சுணு எனப்பட்டது
- உணவிற்குப்பின் சிற்றுண்டியாக எள்ளுருண்டை ( திலசங்குலிக்கா ) பயன்படுத்தப்பட்டது.

- செல்வந்தர்கள் மத்தியில் விருப்பமான உணவாக விளங்கியது, மணம் நிறைந்த நெய்யால் சுடப்பட்ட மான் இறைச்சியும், தவிடுடனான சோறும் என சத்தர்மரத்னாவலியில் குறிப்படப்பட்டுள்ளது.

- அக்கால மக்கள் கிழங்கு அதிகளவில் உண்டனர் கிழங்கை குறிப்பிடுவதற்கு சொடல என்ற சொல் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது

- கெட்டியான கறி நியம்பலாவ என அழைக்கப்பட்டது

# 6.6 சூழல் பாதுகாப்பு

| | |
|---|---|
| பண்டுகாபயன் | நகரகுப்பைகளை அகற்ற பணியாட்களை நியமித்தான் |
| நான்காம் மகிந்தன் | உயர்நிலங்களில் உள்ள மரங்களை வெட்டக்கூடாது (அநுராதபுர கல்வெட்டு) |
| மூன்றாம் உதயன் | காட்டுமரங்களை வெட்டவேண்டாம் புத்தன்னஹெல கல்வெட்டு) |
| ஐந்தாம் காசியப்பன் | மரஞ்செடிகளை பாதுகாப்பதில் அரச சட்டங்களை பின்பற்றவும் (கொண்டவெட்டுவான் கல்வெட்டு) |
| உரிய காலத்திற்கு முன் அறுவடை செய்யக்கூடாது (வெஸ்ஸகிரிய கல்வெட்டு) | |
| வாய்க்கால்களில் கட்டுப்பாடற்ற முறையில் மீன்பிடிக்க கூடாது (மதரமஞ்சக்கவரி) | |
| சூழல் சமநிலையை பேண மிருகங்களை பாதுகாத்தனர் | |